ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

**தொடர்பூட்டல் திணைக்களம்**
30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை
தொலைபேசி : 2477424, 2477423, 2477418
தொலைநகல்: 2346257, 2477739
மின்னஞ்சல்: dcommunications@cbsl.lk, communications@cbsl.lk
வெப்தளம்: www.cbsl.gov.lk

# பத்திரிகை வெளியீடு

| | |
|---|---|
| வெளியிடுபவர் | புள்ளிவிபரத் திணைக்களம் |
| திகதி | 2020.08.25 |

## காணி மதிப்பீட்டுக் குறிகாட்டி[1] - 2020 முதலரையாண்டு

### முக்கிய விடயங்கள்

| காணி மதிப்பீட்டுக் குறிகாட்டி | ஆண்டு அதிகரிப்பு 7.1 % |
|---|---|
| பெறுமதி 141.6 | அரையாண்டு அதிகரிப்பு 2.0 % |

காணி மதிப்பீட்டுக் குறிகாட்டி
ஆண்டுச் சதவீத அதிகரிப்பு




காணி மதிப்பீட்டுக் குறிகாட்டியின்
புவியியல் உள்ளடக்கம் 2017 முதல்:
கொழும்பு மாவட்டம்




மூலம்: இலங்கை மத்திய வங்கி

கொழும்பு மாவட்டத்தின் காணி மதிப்பீட்டுக் குறிகாட்டியானது 2020இன் முதலரையாண்டு காலப்பகுதியின் போது 7.1 சதவீத ஆண்டு அதிகரிப்பினைப் பதிவுசெய்து 141.6ஆகக் காணப்பட்டது. அதேவேளை, அரையாண்டு அடிப்படையில் காணி மதிப்பீட்டுக் குறிகாட்டியானது 2.0 சதவீதத்தினால் சிறிதளவு அதிகரித்துள்ளது. காணி மதிப்பீட்டுக் குறிக்காட்டியின் ஆண்டு மற்றும் அரையாண்டு என்ற இரண்டினதும் சதவீத மாற்றங்கள், அண்மைய காலப்பகுதிகளின் போது வீழ்ச்சிப்போக்கொன்றினைக் காண்பித்தன.

காணி மதிப்பீட்டுக் குறிகாட்டியின் அனைத்துத் துணைக் குறிகாட்டிகளும் அதாவது, வதிவிடக் காணி மதிப்பீட்டு குறிகாட்டி, வர்த்தகக் காணி மதிப்பீட்டுக் குறிகாட்டி மற்றும் கைத்தொழில் காணி மதிப்பீட்டுக் குறிகாட்டி அனைத்தும் ஒட்டுமொத்த அதிகரிப்பிற்குப் பங்களித்துள்ளன. கைத்தொழில் காணி மதிப்பீட்டுக் குறிகாட்டியானது 7.2 சதவீதம் கொண்ட உயர்வான ஆண்டு அதிகரிப்பினை பதிவுசெய்த அதேவேளை வதிவிடக் காணி மதிப்பீட்டுக் குறிகாட்டி மற்றும் வர்த்தகக் காணி மதிப்பீட்டுக் குறிகாட்டி ஆகிய இரண்டும் 7.1 சதவீத அதிகரிப்புக்களைப் பதிவுசெய்தன.

**காணி மதிப்பீட்டுக் குறிகாட்டி அசைவுகள் (2017 முதலரை = 100)**




மூலம்: இலங்கை மத்திய வங்கி

[1] இலங்கை மத்திய வங்கியினால் தொகுக்கப்பட்ட காணி விலைச் சுட்டெண் 2019இன் இரண்டாம் அரைப்பகுதியிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் காணி மதிப்பீட்டுக் குறிகாட்டி என மீளப்பெயரிடப்பட்டிருக்கிறது.

## காணி மதிப்பீட்டுக் குறிகாட்டிகளும் வளர்ச்சி வீதங்களும்

| கொழும்பு மாவட்டத்திற்கான காணி மதிப்பீட்டுக் குறிகாட்டி (தளக் காலப்பகுதி: 2017 1ஆம் அரை) | குறிகாட்டிப் பெறுமதி | | | | | ஆண்டுச் சதவீத மாற்றம் | | | அரையாண்டுச் சதவீத மாற்றம் | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 2018 1ஆம் அரை | 2018 2ஆம் அரை | 2019 1ஆம் அரை | 2019 2ஆம் அரை | 2020 1ஆம் அரை | 2019 1ஆம் அரை | 2019 2ஆம் அரை | 2020 1ஆம் அரை | 2019 1ஆம் அரை | 2019 2ஆம் அரை | 2020 1ஆம் அரை |
| வதிவிடக் காணி மதிப்பீட்டுக் குறிகாட்டி | 116.5 | 125.0 | 131.4 | 137.9 | 140.7 | 12.8 | 10.4 | 7.1 | 5.1 | 5.0 | 2.0 |
| வர்த்தகக் காணி மதிப்பீட்டுக் குறிகாட்டி | 116.8 | 125.9 | 132.2 | 138.8 | 141.6 | 13.2 | 10.3 | 7.1 | 5.1 | 5.0 | 2.0 |
| கைத்தொழில் காணி மதிப்பீட்டுக் குறிகாட்டி | 115.8 | 126.6 | 133.0 | 139.6 | 142.5 | 14.9 | 10.3 | 7.2 | 5.0 | 5.0 | 2.1 |
| காணி மதிப்பீட்டுக் குறிகாட்டி | **116.3** | **125.8** | **132.2** | **138.8** | **141.6** | **13.6** | **10.3** | **7.1** | **5.1** | **5.0** | **2.0** |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

### *தொழில்நுட்பக் குறிப்பு:*

***உள்ளடக்கமும் கால இடைவெளியும்***

காணி விலைச் சுட்டெண் கொழும்பு மாவட்டத்திலுள்ள 5 பிரதேச செயலகப் பிரிவுகளை உள்ளடக்கி 1998 இலிருந்து 2008 வரை ஆண்டு அடிப்படையிலும் 2009 இலிருந்து 2017 வரை அரையாண்டு அடிப்படையிலும் தொகுக்கப்பட்டன. அதனைத்தொடர்ந்து 2017 இலிருந்து புவியியல் உள்ளடக்கம் கொழும்பு மாவட்டத்திலுள்ள 13 பிரதேச செயலகங்களையும் உள்ளடக்கத்தக்க விதத்தில் விரிவாக்கப்பட்டதுடன் இது 2017இன் முதலரைப்பகுதியைப் பரிசீலனையில் கொண்டு அடிப்படைக் காலமாக மீள்தளப்படுத்தப்பட்டது. 2019இன் 2ஆம் அரைப்பகுதியிலிருந்து காணி விலைச் சுட்டெண் காணி மதிப்பீட்டுக் குறிகாட்டி என மீளப்பெயரிடப்பட்டதுடன் அரையாண்டு அடிப்படையில் இது வெளியிடப்பட்டு வருகிறது.

***தரவு மூலம்***

பேர்ச் ஒன்றுக்கான வெற்றுக் காணி விலை அரையாண்டு அடிப்படையில் அரசாங்க விலை மதிப்பீட்டுத் திணைக்களத்திலிருந்து சேகரிக்கப்பட்டது.

***முறையியல்***

காணிப் பயன்பாட்டின் பல்லினத் தன்மையினைக் கருத்திற்கொண்டும் சீர்மையினைப் பேணும் பொருட்டும் வதிவிட, வர்த்தக மற்றும் கைத்தொழில் காணிகளுக்கான மூன்று துணைக் குறிகாட்டிகளும் பிரதேசத்தில் உள்ள பேர்ச் சராசரி ஒன்றுக்கான சராசரி வெற்றுக் காணி விலையினைக் கருத்திற் கொண்டு ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவிற்கும் வெவ்வேறாகக் கணிப்பிடப்படுகின்றன. காணி மதிப்பீட்டுக் குறிகாட்டியானது இம் மூன்று துணைக் குறிகாட்டிகளினதும் எளிய சராசரியாகும்.